# கொள்கை அறிக்கை

இளந்தமிழகம் இயக்கம்

# கொள்கை அறிக்கை

***கடந்த காலத்தை உள்வாங்கி நிகழ்காலத்தில் ஊன்றி நின்று எதிர்காலத்தை நோக்கிப் பயணித்து, பழையன கழித்து புதியன புகுத்திடும் மரபினை ஏற்று, புதுமையை உட்செரித்து, மாறவும் மாற்றவும் துணிவு கொண்டு, புதிய சிந்தனைகளின் ஊற்றுக் கண்ணாய்த் திகழும் இளம்பருவத்தின் பண்புகளோடு மிளிரும் இளந்தமிழகத்தின் ஓர் அமைப்பு வடிவமே இந்த இளந்தமிழகம். இது இளந்தமிழகம்! சமூக நீதிக்காகவும், சனநாயகத்திற்காகவும், சமத்துவத்திற்காகவும் உள்ளாற்றலுடன் எழுந்தமிழகம்!***

இளந்தமிழகம் இயக்கம்

வெளியீடு : சிற்றுளி | முதல் பதிப்பு : சூலை 2014
அலுவலக முகவரி : 42/21, மேட்டுத் தெரு, வேளச்சேரி, சென்னை 600042
98844 68039 | 99419 06390
www.ilanthamizhagam.com | www.visai.in
ilanthamizhagam@gmail.com

**இளந்தமிழகம்**

# உள்ளே...


இளந்தமிழகம் இயக்கம் - ஓர் அறிமுகம் 7

கொள்கை விளக்கம் 9

தமிழ்நாட்டு மக்களின் சமூக வளர்ச்சி நிலை 10

சாதியக் கட்டமைப்பு 10

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் 13

மதப் பெரும்பான்மைவாதம் 14

வட்டாரத் தன்மை 14

பெண்களின் நிலை 15

மாற்றுப் பாலினத்தவர்களின் நிலை 17

மீனவர்கள், பழங்குடி மக்களின் நிலை 17

தமிழ்நாட்டு மக்களின் அரசியல் வளர்ச்சி நிலை 19

இந்திய, தமிழக அரசு 20

ஈழ விடுதலைப் போராட்டமும்
ஏனைய தேசிய இன விடுதலைப் போராட்டங்களும் 26

புதிய நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் தோற்றமும்
அதன் குறிப்பான சிக்கல்களும் 28

இயக்கத்தின் தேவையும் நோக்கமும் 31

# இளந்தமிழகம் இயக்கம்

# ஓர் அறிமுகம்

*க*டந்த 2008 ஆம் ஆண்டு இறுதியில் இலங்கையில் 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற பெயரில் சிங்கள அரசு, ஈழத் தமிழர்கள் மீது நடத்திய இன அழிப்புப் போர் மிகக்கொடூரமான கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான மனித உயிர்கள் அன்றாடம் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தன. இக்கொடூரப்போரை நிறுத்த வலியுறுத்தி, அக்காலகட்டத்தில் தமிழ்நாட்டின் பல்வேறு அரசியல் கட்சிகள், இயக்கங்களையும் கடந்து வழக்குரைஞர்கள், மாணவர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள், மகளிர் அமைப்புகள், திருநங்கைகள் என பலதரப்பினர் வீதிக்குவந்து போராட்டங்களை நடத்தினர்.

**அதுவரை எந்த அரசியல் செயற்பாட்டிலும் ஈடுபட்டிராத தகவல் தொழில்நுட்பத் துறையைச் சார்ந்த இளைஞர்கள் சிலர், அப்போரை நிறுத்த ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் சென்னையில் உள்ள 'டைடல் பூங்கா' முன்பு 'போரை நிறுத்து; தமிழர்களைக் காப்பாற்று' (Stop War; Save Tamils) என்ற முழக்கத்துடன், படித்த நகர்ப்புற இளைஞர்களை ஒன்றுதிரட்டி மனிதசங்கிலிப் போராட்டத்தை நடத்தினார்கள். இச்செயல்பாட்டினால் ஒன்று சேர்ந்த இளைஞர்கள், போரை நிறுத்தவும் ஈழத்தமிழர்களின் உரிமைகளை மீட்கவும் வலியுறுத்தி தொடர்ந்து செயல்படத் தொடங்கினர். போராட்டத்தில் இயல்பாக எழுந்த மேற்கண்ட முழக்கமே இயக்கத்தின் பெயராக நிலைத்துவிட்டது. இப்படித்தான் "சேவ் தமிழ்ஸ்" (Save Tamils) இயக்கம் 2008ஆம் ஆண்டு உருவானது.**

இயக்கத்தின் பெயர் தமிழில் இல்லை என்பதாலும் அதன் பொருள் தமிழர்களைக் கையறு நிலையினராகக் காட்டுவதாக உள்ளதாலும் (victimized) இப்பெயரை மாற்றுவது என முடிவு செய்யப்பட்டது. ஜூலை 13, 2014 இல் "இளந்தமிழகம்" எனப் பெயர் மாற்றப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் துறை உள்ளிட்ட புதிய தொழில்வளர்ச்சியின் விளைவாக விரிவடைந்து வரும் நகரங்களில் வாழ்ந்துவரும் புதிய நடுத்தர வர்க்கப் பிரிவினரை இவ்வியக்கம் மிகுதியாகக் கொண்டிருக்கிறது.

# கொள்கை விளக்கம்

ஈழத் தமிழர்கள் மீதான சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் தந்த சனநாயக உணர்வு, பிற ஒடுக்கு முறைகளையும் உணரும் ஆற்றலை வழங்கியது. 2008 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தமிழ்நாட்டிலும், பிற பகுதிகளிலும் நடைபெற்ற பல்வேறு ஒடுக்குமுறைகளைக் கண்டித்தும், அதற்கு எதிராகப் போராடிய மக்களை ஆதரித்தும் எமது இயக்கம் பல்வேறு செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. இதிலிருந்து கிடைத்தப் பட்டறிவினூடாகவும், பெற்ற அரசியல் பயிற்சியைக் கொண்டும் தன்னுடைய கொள்கை விளக்கம், எதிர்காலச் செயல்திட்டம், தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்த நிலைப்பாடு முதலியவற்றை பின்வரும் அறிக்கையில் **இளந்தமிழகம் இயக்கம்** முன்வைத்துள்ளது.

இன்றுவரை, உலகின் பல்வேறு பகுதிகளில் உருவாகியுள்ள அரசியல் இயக்கங்களின் திட்டங்களும் செயல்பாடுகளும் பின்வருவனவற்றைப் பொறுத்து வேறுபடும்.

- **அப்பகுதிவாழ் மக்களின் சமூகம், அரசியல், பொருளாதார வளர்ச்சி நிலை**
- **மக்களை ஆள்கின்ற அரசின் தன்மை**
- **மக்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகள்**
- **அச்சமூகத்தின் எதிர்காலத் தேவை**

தமிழ்நாட்டிலும் இந்தியத் துணைக்கண்டத்திலும் நிலவும் சமூக அரசியல் வளர்ச்சிநிலை, அரசுகளின் தன்மை, எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகள், தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலத் தேவை ஆகியவை குறித்த எமது பார்வையை முன் வைத்து இயக்கத்தின் நோக்கத்தையும் விளக்கியுள்ளது.

# தமிழ்நாட்டு மக்களின் சமூக வளர்ச்சி நிலை

## சாதியக் கட்டமைப்பு

எந்தச் சமூகமானாலும் அச்சமூகம் இரண்டாகப் பிரிந்திருப்பதைக் காணலாம். முதல் பிரிவினர் சமூகம், அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் அதிகாரமும், முழு உரிமையும் கொண்டு ஏனைய மக்கள் பிரிவினர் மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாக இருப்பவர்கள். இரண்டாம் பிரிவினர் மேற்கூறப்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்டும், முதல் பிரிவினரால் ஒடுக்கப்பட்டும் வாழ்பவர்கள். சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய மூன்றின் வளர்ச்சி நிலைக்கேற்ப ஒவ்வொரு பகுதிகளிலும் குறிப்பிட்ட நிலைமைகள் வேறுபடுகின்றன.

மன்னராட்சி நிலவும் நாட்டில், அரச குடும்பத்தினரும் அதன் சார்பாளர்களும் அந்நாட்டு குடிமக்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றனர். உழவுத் தொழில் மிகுதியான நாட்டில் நிலவுடைமையாளர்கள், நிலமற்ற கூலிவேலை செய்யும் உழவர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்தச் சமூகத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். தொழில் வளர்ச்சி மிகுந்த நாட்டில் தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களான பெருமுதலாளிகள், அந்நிறுவனங்களில் கூலிவேலை செய்யும் தொழிலாளர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்தச் சமூகத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். நிற வேற்றுமைகள் நிலவும் மேற்கத்திய நாடுகளில், வெள்ளை நிறத்தவர்கள் கருப்பர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்தச் சமூகத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இருவேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்ற நாடுகளில் ஒரு தேசிய இனம் மற்றொன்றின் மேல் ஆதிக்கம் செலுத்தும் இனமாக இருப்பதை நாம் அறிவோம்.

இந்தியத் துணைக்கண்டத்தில் நிலவும் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பு என்பது சாதியடிப்படையில் அமைந்துள்ளது. இச்சாதிய அமைப்பில் ஆதிக்கம் செலுத்துபவர்கள், அடக்கப்பட்டு வாழ்பவர்கள் என இரு பிரிவுகளாக மட்டுமல்லாமல் ஆயிரக்கணக்கான உட்பிரிவுகளாக மக்கள் பிரிந்து வாழ்கின்றனர். இப்பிரிவுகள் அனைத்தும், வாயிற் படிகளும் மாடிப்படிகளும் அற்ற ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பைப் போன்று ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கிவைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சாதியினரும் தனக்குக் கீழ் வகைப்படுத்தப்பட்டச் சாதி யினர் மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும், தனக்கு மேல் உள்ள சாதியினரால் அடக்கப்படுபவர்களாகவும் உள்ளனர். இங்கு நிலவும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்குச் சாதிப் பிரிவுகளே அடிப்படை.

சிற்றூர்களிலும் சிறுநகரங்களிலும் இரட்டைக் குவளைமுறை, இரட்டைச் சுடுகாடு, கோயிலுக்குள் நுழையத் தடை, ஊர் சேரி என்ற பிரிவினை உள்ளிட்ட தீண்டாமைக் கொடுமைகள் நீடித்துக் கொண்டிருக்கும் நிலைமையும், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி போன்ற தனித் தொகுதிகளில் தேர்தல் நடக்கவே ஏற்படுத்தப்பட்ட தடைகளும் இங்குள்ள சாதிய அமைப்பிற்கு சான்றுகள். பெருநகரங்களிலோ அந்நகரத்திற்கு வெளியே ஒடுக்கப்பட்டோர் ஒதுக்கிவைக்கப்படும் தீண்டாமை தொடர்கிறது. சென்னையில் கண்ணகி நகர், செம்மஞ் சேரி, பெரும்பாக்கம் உள்ளிட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் தீண்டாமையின் புதிய வடிவம். நகரத்தில் அதிகக் குடிக்கூலி (வாடகை) கொடுக்கும் திறன் பெற்றவராயிருந்தாலும் சாதி அடிப்படையில் குடிக் கூலிக்கு வீடு தர மறுப்பது தொடர்கிறது.

ஒரே சாதிக்குள் திருமணம் செய்யும் அகமணமுறை சாதி இருத் தலுக்கான அடித்தளமாக இருக்கிறது. இது தீண்டாமையின் மற்றொரு வடிவமாகும். இந்தத் தீண்டாமை முறை நம் சமூகத்தில் அசைக்க முடியாத நிலையில் உள்ளது. சாதி வேறுபாடுகளைக் கடந்து காதல் திருமணம் புரியும் இணையர்களைப் பிரிப்பதற்கு நடக்கும் கட்டப் பஞ் சாயத்து (சாதிப் பஞ்சாயத்து) இன்று உயர் நீதிமன்றம் வரை நீண்டு செல்கிறது. இன்னொருபுறம் காதல் திருமணங்களைக் காரணம் காட்டி சாதி ஆதிக்க வெறியர்கள் ஒடுக்கப்பட்ட சாதி மக்களின் வீடுகளைச் சூறையாடி, கொளுத்துவதும் தொடர்கிறது. தங்கள் சாதியின் 'கௌரவத்திற்காக' என்று காதலர்களைப் படுகொலை செய்வது சாதிய வன்கொடுமைகளின் உச்சம். 2012–13 ஆம் ஆண்டுகளில் தர்மபுரியில் திவ்யா, இளவரசன் காதல் திருமணத்தையொட்டி திவ்யாவின் தந்தை நாகராசன் தற்கொலை செய்து கொண்டார். அதைத் தொடர்ந்து நத்தம், கொண்டாம்பட்டி, அண்ணாநகர் கிராமங்கள் சூறையாடப் பட்டதும் திவ்யாவும் இளவரசனும் உயர்நீதிமன்றத்தில் பிரிக்கப் பட்டதும் இளவரசன் சந்தேகத்திற்குரிய வகையில் இறந்து போனதும் அகமணமுறையின் கோர முகத்தை உணர்த்தி நிற்கும் நிகழ்காலச் சான்றுகள்.

சாதிய ஒடுக்குமுறைகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தீண்டாமை உள்ளிட்ட சமூக வன்கொடுமைகளாக மட்டுமின்றி பொருளாதார ஏற்றத் தாழ்வுகளாகவும் விரிந்துள்ளன. ஏழைகள் என்ற பட்டியலில் மிகுதியானோர் தாழ்த்தப்பட்டவர்களாகவும், அதற்கடுத்த நிலையில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாகவும் இருப்பதைச் சாதிப் படிநிலையாக வரிசைப்படுத்த முடியும். இது மிகைப்படுத்தல் இல்லை. சிற்றூர்களில் பெருநில உடைமையாளர்கள், சிறுகுறு உழவர்கள், நிலமற்ற கூலி உழவர்கள் என்று பிரித்து ஆய்ந்தால் மேலிருந்து கீழாகச் சாதிப் படிநிலை வெளிப்படும். நகரத்தில் பேருந்து ஓட்டுநர்கள், தானி

(ஆட்டோ) ஓட்டுநர்கள், பூ விற்பவர்கள், தேநீர், உணவு விடுதிகளில், சிறுகடைகளில் வேலை செய்பவர்கள், தள்ளுவண்டிகளிலும் நடைபாதைகளிலும் வணிகம் செய்யும் சிறு வணிகர்கள், ஆயத்த ஆடை ஏற்றுமதி, திருப்பூர் பின்னலாடை நிறுவனங்கள் போன்றவற்றில் வேலை செய்யும் கூலித் தொழிலாளர்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் போன்றோரையெல்லாம் யாரென்று நாம் உற்று கவனித்தால் சாதிப் படிநிலைகள் புலப்படும். மேலும் அரசுத் துறை, வங்கித் துறை, தகவல் தொழில்நுட்பத் துறை என்று எந்தத் துறையாக இருந்தாலும் அதில் கடைநிலைத் தொழிலாளர்களாக (ஒப்பந்தத் தொழிலாளர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள்) வேலை செய்பவர்கள் யார்? மேலாளர்களாக இருப்பவர்கள் யார்? என்று கவனித்தால் இச்சாதிப் படிநிலை நன்கு விளங்கும். இவற்றை முற்றாக மறுப்பவர்கள், சேரிகளில் ஏழ்மைக்குச் சொந்தக்காரர்களாக வாழ்பவர்கள் யார்? என்று ஆய்வு செய்து பார்த்தால் தங்களுடைய கருத்தை மாற்றிக் கொள்வார்கள். மேற்குறிப்பிட்ட சான்றுகள் சாதிக் கட்டமைப்புக்கு இருக்கும் பொருளாதார அடித்தளத்தை விளங்கச் செய்யும்.

படித்த மற்றும் பரந்த உலக அறிவைப் பெறுவதற்கான வாய்ப்புகளைப் பெற்றவர்களில் ஒரு பகுதியினர் இன்றும்கூட சாதியப் பழக்க வழக்கங்களை அப்படியே தொடர்கின்றனர்; சாதிப் பெருமையைக் கைவிட மறுக்கின்றனர். 2011 ஆம் ஆண்டு சென்னையில் உள்ள ஒரு பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் தனது ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தில் விளையாட்டுப் போட்டி களுக்கான அணிகளுக்கு உயர்சாதிப் பெயர்களை வைத்துக் கொண் டாடியது ஓர் எடுத்துக்காட்டாகும். 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் பரமக்குடியில் ஆறு தாழ்த்தப்பட்டோர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். இதை மிக எளிதாகக் கடந்து சென்றதுகூட இவர்களின் சாதிய உளநிலைக்கு மற்றொரு சான்றாகும். இப்படு கொலைகளைக் கண்டிப்பதற்கு மாறாக, சமூக வலைத்தளங்களில் (முகநூல்) இவர்கள் துப்பாக்கிச் சூட்டை ஆதரித்துப் பேசியது, சாதிய வெறித்தனத்தின் உச்சம்.

மக்கள்போராட்டங்களின் விளைபயனாய் கல்வி,வேலைவாய்ப்புகளில் கொண்டுவரப்பட்ட இட ஒதுக்கீட்டு உரிமையின் நியாயத்தைக் கூடப் புரிந்துகொள்ளாத நிலையில் நகர்ப்புறத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்களில் ஒரு சாரார் உள்ளனர். இதன் விளைவாக இவர்களே இடஒதுக்கீட்டுக்கு எதிரான ‘தகுதி, திறமை’ என்ற சாதிய ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்தும் வாதத்திற்கு இரையாகின்றனர்.

பல நூற்றாண்டுகளாகக் கல்வி பெறுவதிலும் வேலை பெறுவதிலும் இச்சமூகத்தால் மறுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்த மக்களுக்கு, இட ஒதுக்கீடு சலுகையல்ல, சமூக நீதியாகும். இச்சமூகத்தின் வளர்ச்சியில் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கும் ஒரு பெயராண்மை (பிரதிநிதித்துவம்) முறையிலான ஏற்பாடு ஆகும். இதை நகர்ப்புறத்தைச் சேர்ந்த படித்தவர்களில் ஒரு பகுதியினர் உணரத் தவறுகின்றனர்.

சுருக்கமாகச் சொன்னால், இவ்வாறு சாதியக் கட்டமைப்பினால் ஒடுக்கப்படுபவர்கள், அவர்களின் அடிப்படை உரிமைகளான உணவு, உடை, வாழ்விடம்; வாழ்வாதார உரிமைகளான கல்வி, வேலை, வேலைக் கேற்ற கூலி, மருத்துவம்; சனநாயக உரிமைகளான சுயமரியாதை, சம உரிமை; அரசியல் உரிமைகளான அரசியல் பெயராண்மை, சட்ட மியற்றும் அதிகாரம் ஆகிய அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டோ, குறைக்கப்பட்டோ ஒடுக்கப்படுகின்றனர்.

ஒடுக்கப்படுவோரின் அனைத்து உரிமைகளையும் வென்றெடுக்க, சாதியக் கட்டமைப்பைத் தகர்த்தெறிவது இன்றியமையாதது. இதற்கு சாதி ஒழிப்பிற்குரிய புறச்சூழலை (கல்வி, வேலைவாய்ப்பு, நில அதிகாரம் போன்றவற்றில் சாதி அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளை ஒழித்தல்) உருவாக்குவது முதன்மையானது. அத்தகைய புறச்சூழலை உருவாக்கும் சாதி ஒழிப்புக் கொள்கைகளைச் செயல்படுத்த அரசியல் அதிகாரமும், சட்டங்களும் வேண்டும். அதற்குச் சாதி ஒழிப்பைக் கொள்கையாகக் கொண்ட அரசு இருக்க வேண்டும், இவை மட்டுமின்றி மக்கள் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். சாதி அடிப்படையில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளையும் கொடுமைகளையும் சகித்துக் கொள்ளும் சாதிய உளநிலை மறைவதற்குத் தொடர்ச்சியான கருத்துப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. சாதியக் கட்டமைப்பினால் பிரிந்துள்ள மக்களிடம் சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய விழுமியங்களைப் போற்றும் சனநாயக உணர்வை வளர்த்தெடுப்பதும் இன்றியமையாதது.

## பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்

சாதியக் கட்டமைப்புக்கு அடித்தளமான சமூகப் பொருளியலைக் கொண்டுள்ள இச்சமூகத்தில் இலாபத்தை மட்டுமே குறியாய்க் கொண்ட தொழில்துறை வளர்ச்சியும் நகரமயமாக்கலும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை மிகுதியாக்குகின்றன. தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் உள்ளிட்டப் புதிய பொருளாதாரக் கொள்கைகளினால், ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமான இடைவெளி அதிமாகிக்கொண்டே செல்கிறது. பணக்காரர்கள்

மேலும் பணக்காரர்களாகவும் ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் ஆக்கப்படுகின்றனர். செல்வம் கொழிக்கும் பணக்காரர்கள் ஏழைகளை அடக்கி, ஒடுக்கி ஆள்கின்றனர். **அரசின் பொருளாதாரக் கொள்கைகள் ஏழை, எளிய மக்களின் நலன்சார்ந்ததாக இருக்கச் செய்வதன் மூலமே பணக்காரர், ஏழை என்ற ஏற்றத்தாழ்வைக் களைந்திட முடியும்.**

## மதப் பெரும்பான்மைவாதம்

இந்து மதம் இந்நாட்டின் பெரும்பான்மையினரின் மதமாகக் காட்டப்பட்டு வருகிறது. இந்தியா 'இந்துக்களின் நாடு', இந்துமதப் பண்பாடே 'இந்தியப் பண்பாடு' போன்ற கருத்துகள் இச்சமூகத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதனால் இசுலாம், கிறித்தவம் உள்ளிட்ட மதச் சிறுபான்மையினரின் மதப் பழக்க வழக்கங்களைப் புதிராகவும் காழ்ப்புணர்ச்சியோடும் பார்க்கும் போக்கு இருக்கிறது. மதச்சிறும்பான்மையினர் அரசியல், பொருளியல், பண்பாட்டுத் தளங்களில் ஒடுக்குமுறைக்கு ஆளாகி வருகின்றனர். கல்வி, பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைவிட பின் தங்கிய நிலைமையில் இசுலாமிய மக்கள் இருக்கிறார்கள் என்ற உண்மையை சச்சார் ஆணையத்தின் அறிக்கை எடுத்தியம்புகிறது.

1990 ஆம் ஆண்டுகளில் இந்திய பாகிசுதான் அரசுகளிடையே உள்ள முரண்பாட்டினைப் பெரிதாகக் காட்டுவதன் மூலம் இந்தியாவில் இசுலாமிய எதிர்ப்புணர்வு இந்துத்துவ ஆற்றல்களால் இந்துப் பயங்கர வாதக் கருத்தியலாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இது மக்களை மேலும் பிரித்தாள்வதற்கு வாய்ப்பாக இருக்கிறது. எனவே இந்துத்துவ ஆதிக்கத்திற்கு எதிரான கருத்தியல் போராட்டத்தை நடத்தி, மத ஆதிக்கமற்ற சமூகமாக மாற்றிட வேண்டும். **அதற்கு உண்மையான பொருளில் மதச்சார்பற்ற அரசும் மதச்சிறுபான்மையினரின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கின்ற சட்டங்களும் தேவைப்படுகின்றன.**

## வட்டாரத் தன்மை

தமிழ்நாட்டில் வட்டார அடிப்படையில் மக்கள் பிரிந்து கிடக் கின்றனர். சான்றாக, அணு உலைகளினால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என உணர்ந்து போராடும் கூடங்குளம், இடிந்தகரையைச் சுற்றியுள்ள மக்களின் போராட்டம் ஒரு பகுதிக் கோரிக்கையாகவே பார்க்கப்படுகிறது. முல்லைப் பெரியாறு அணை, காவிரி நதிநீர்ப்

பங்கீடு போன்ற சிக்கல்களும் வட்டாரத் தன்மையோடுதான் பார்க்கப் படுகின்றன. **இதனால், தமிழ்நாட்டு மக்கள் தங்கள் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாத்துக்கொள்ள இயலாமல் உள்ளனர். எனவே, இவ்வட்டார உளநிலைக்கு மாறாக தமிழ்நாட்டு மக்கள் என்ற கூட்டுணர்வு வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.**

## பெண்களின் நிலை

இயற்கைக் காரணிகளால், மனித குலம் நீடித்து இருக்கத் தேவையான மறு உற்பத்தியில் (மகப்பேறு உள்ளிட்ட) பெருமளவு உழைப்பைச் செலுத்தவேண்டிய நிலையில் பெண்கள் இருக்கின்றனர். ஒரு காலத்தில் மறு உற்பத்தி என்பது இச்சமூகத்தின் அடிப்படைத் தேவையாகப் பார்க்கப்பட்டபோது, பெண்ணின் சமூகத்தகுதி உயர்வானதாக இருந்தது. இயற்கை வளங்களும் உற்பத்தியும் எல்லோருக்கும் பொது என்ற நிலை மாறி, மனிதக் கூட்டத்தின் ஒரு பகுதியினர் மட்டும் அவற்றின் மீது தனித்தனியே உரிமையும் ஆதிக்கமும் செலுத்தத் தொடங்கினர். இதனால் உருவான தனிச்சொத்தைப் பாதுகாப்பதற்குக் குடும்பம் என்ற அமைப்பு தோன்றியது. சொத்துடன் ஆண் பிணைக்கப்பட்டதிலிருந்து ஆண்கள் முழு அதிகாரம் பெற்றனர். குடும்பத்தின் சொத்தை அடுத்தத் தலைமுறைக்கு ஆண் குழந்தை வாயிலாகக் கைமாற்றும் வேலையைச் செய்யும் கருவிகளாகப் பெண்கள் ஆக்கப்பட்டனர். மறு உற்பத்தி சமூகத் தேவை என்பதற்கு மாறாக குடும்பத் தேவையாகச் சுருங்கியதும் சமூகத்தில் ஆணாதிக்கம் தொடங்கி நிலைபெற்றுக் கொண்டதும் இப்படித்தான். பணமும் அதிகாரமும் மட்டுமே சமூக நிலையை உயர்த்திக்காட்டும் அளவுகோலானதும், குழந்தையைப் பெற்றெடுக்கவும் வளர்க்கவும் குடும்பத்தைப் பராமரிக்கவும் பெருமளவிலான உழைப்பைச் செலவிடும் பெண்கள் சமூகத்தில் இரண்டாம் நிலை மனிதர்களாக மாற்றப்பட்டனர். உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் இதுவே பொது நிலைமையாக இருந்தாலும் அந்தந்தச் சமூகத்தின் வளர்ச்சி நிலை, அங்கு நடந்தேறிய போராட்டங்களின் விளைவால் பெண்களின் சமூக நிலையில் சிற்சில முன்னேற்றங்களும் உள்ளன.

இன்றைய இந்தியச் சூழலில், சமூகத்தின் பார்வையில் பெண் என்பவள் ஆணின் உடைமை; ஆணின் அதிகாரத்திற்கும் முடிவிற்கும் கட்டுப் பட்டவள்; ஆனால் இன்பம் துய்க்கக்கூடிய ஒரு பொருள். குழந்தை பெறுவதும், வளர்ப்பதும், குடும்பத்தைப் பராமரிப்பதும் பெண்களின் தலையாய கடமையாக இருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்திற்குள்ளும் தனிமனித உரிமையும் தேர்வு உரிமையும் சொத்து உரிமையும் மறுக்கப்பட்டவர்களாகப் பெண்கள் இருக்கின்றனர். சமூகத்தின்

எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் அரசியலில் எந்தப் பங்கேற்பும் இன்றி வீட்டுச் சிறைக்குள் முடக்கப்பட்டுள்ளனர். பெண்மை என்றும் பெண்மைக்கான இலக்கணங்கள் என்றும் புனையப்பட்டிருக்கும் மென்மை, தாய்மை, கற்பு, ஒழுக்கம், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, அழகு என்ற அத்தனையும் பெண்ணடிமைத்தனத்தை முறைமைப் படுத்துவதற்கென்று கட்டியெழுப்பப்பட்டுள்ளன. இந்நிலையில் உடன் கட்டை, கருக்கொலை, வாக்குரிமை மறுப்பு, சொத்துரிமை மறுப்பு போன்ற பெண்கள் மீதான பல ஒடுக்குமுறைகளை உடைத்தெறிந்து பெண்ணினம் முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

நகரங்கள் பெருகிய பின்னணியில் பெண்கள் குடும்ப உற்பத்தியில் இருந்து விடுவிக்கப்பட்டுச் சமூக உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். பல்வேறு துறைகளிலும் வேலைக்குச் செல்கின்றனர். இதையே காட்டி 'இன்று நிறைய மாறி இருக்கிறது, ஏராளமானப் பெண்கள் பல்வேறு துறைகளில் வெற்றிபெற்றவர்களாக இருக்கிறார்கள்', 'எல்லாம் மாறிவிட்டது', 'மெல்ல மெல்லத் தானாக மாறும்' என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஆனால் மேற்குறிப்பிட்ட மாற்றங்கள் பெண்களின் விடுதலைக்கான பயணத்தின் ஒரு தொடக்கமே. அதிலும் தமிழ்நாட்டில் சாதி, மத ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டப் பட்டறிவோடு ஒப்பிடும்போது பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் மிகக் குறைவாகவே நடந்துள்ளன.

குழந்தை பெறுதலும், பாலூட்டுதலும் தவிர மற்ற எல்லா வேலைகளையும் ஆண், பெண் இருவரும் செய்யலாம். ஆனால் சமூகத்திலும் வீட்டிலும் ஆண், பெண் என்ற அடிப்படையில் வேலைப்பிரிவினைகள் இருக்கின்றன. வீட்டு வேலைகள் அனைத்தும் பெண்களுக்கு மட்டும் உரியதாக்கப்பட்டு அவர்கள் ஊதியமில்லாக் கூலிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். உழவு, தொழில்துறை, சேவைத்துறை என்று அனைத்துத் துறைகளிலும் ஆண்களின் கட்டுப்பாட்டிற்குள் செய்யும் வேலைகள் மட்டுமே பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. களையெடுத்தல், நாற்றுநடுதல், சித்தாள் வேலை, தட்டச்சு, அலுவலக வரவேற்பு, செவிலியர், வானூர்திப் பணிப்பெண், தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகளைத் தொகுத்தல் போன்றவை சில எடுத்துக்காட்டுகள். பெண்கள் மீது சுமத்தப்பட்டுள்ள மென்மை, அழகு, பொறுமை, பேதைமை போன்ற அடிமைக் கருத்துகளில் இருந்தே பெண்களுக்குப் பல்வேறு வேலை வாய்ப்புகள் மறுக்கப் பட்டுள்ளது. எல்லாத் துறைகளிலுமே உயர் பதவிகளுக்கான வாய்ப்பு பெண்களுக்கு மறுக்கப்பட்டு வருகின்றன. அமைப்புச் சாரா துறைகளில் ஒரே வேலையில் ஈடுபட்டாலும் ஆணுக்கு இணையான ஊதியம் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை.

இவ்வகையில் நம் சமூகத்தில் பெண்கள் பொருளாதாரத் தளத்திலும் சமூகத் தளத்திலும் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக இருந்து வருகின்றனர்.

சமூகத்தில் சரிபாதியாக உள்ள பெண்களின் இன்றைய நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். பெண் விடுதலையும், சமூக விடுதலையும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தது. பெண் விடுதலையின்றி, சமூக விடுதலை முழுமையடையாது என்பதை எமது இயக்கம் நன்கு உணர்ந்து, பெண் விடுதலையின் முதன்மையான கூறுகளாகச் சிலவற்றை முன்வைக்கிறது. **பெண்கள் பொருளாதார, அரசியல் துறைகளில் ஆண்களுக்குச் சமமான வாய்ப்புகளைப் பெறத் தேவையான அனைத்து வழிவகைகளும் செய்யப்பட வேண்டும். பெண்களுடைய மறு உற்பத்திக்கான உழைப்பு சமூகத் தேவைக்கான உழைப்பாக ஏற்கப்பட வேண்டும். சமூகப் பண்பாட்டுத் தளங்களில், மனித ஆற்றல் என்ற வகையில் ஆணுக்குப் பெண் இளைத்தவளல்ல என்ற சனநாயக உணர்வு இச்சமூகத்தில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். பெண்கள் தம்மை அமைப்பாக்கி இவ்வுரிமைகளை வென்றெடுக்கப் போராடுவதிலிருந்தே இவற்றை அடைய முடியும். எனவே பெண்களை அமைப்பாக அணிதிரட்டும் பணியில் எமது இயக்கம் ஈடுபடும்.**

## மாற்றுப் பாலினத்தவர்களின் நிலை

ஆணாதிக்கச் சமூகத்தில் மாற்றுப் பாலினத்தவர்கள் குறைந்தபட்ச சமூக அங்கீகாரம் கூட இல்லாமல் சொற்களால் விவரிக்க முடியாத பெருந்துயரத்தில் வாழ்ந்து வருகின்றனர். ஏப்ரல் 15, 2014 ஆம் தேதி வந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மூன்றாம் பாலினத்தவர்களாக அவர்களை அங்கீகரித்துச் சுயமரியாதையையும், பாலினம் தொடர்பான முடிவெடுக்கும் உரிமையையும் உயர்த்திப் பிடித்துள்ளது. ஆயினும், இவற்றை நடைமுறைப்படுத்த நீண்ட நெடிய போராட்டத்தை மேற்கொண்டாக வேண்டும். **இந்தப் போராட்டத்தின் ஊடாக சமூகத்தின் சனநாயக உணர்வை வளர்த்தெடுக்க வேண்டும். அப்பணியில் எமது இயக்கம் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும்.**

## மீனவர்கள், பழங்குடி மக்களின் நிலை

தமிழ்நாடு 13 மாவட்டங்களில் 1076 கி.மீ நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. மீனவர்கள் கடல் வாழ் பழங்குடி இன மக்கள். கடல் வளத்தையும் வாழ்வாதாரத்தையும் பாதிக்கக் கூடிய கூடங்குளம்

அணுமின் நிலையம், சேதுக் கால்வாய்த் திட்டம், கடற்கரை தாதுமணல் கொள்ளை, கடலோர மேலாண்மைச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கச்சத்தீவு இந்திய அரசால் இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டுக்கும், தாக்குதலுக்கும், கைதுக்கும் உள்ளாகி வருகின்றனர். மீனவர்களுக்கென்று உரிய அரசியல் பெயராண்மை இல்லை. மீனவர்களுக்கான சிக்கல்களை அவர்களே தனித்து நின்று எதிர்கொள்ளும் நிலைமையே நீடித்து வருகிறது. தமிழகத்தின் கடலோரப் பகுதி மக்களுக்கும் பிற பகுதி மக்களுக்கும் இடையே ஓர் இடைவெளி இருந்து வருகிறது. இவர்களுக்கிடையே கூட்டுச் சமூக உணர்வு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அந்நிலையில்தான், மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரச் சிக்கல்களைத் தீர்க்க முடியும்.

தமிழக மக்கள் தொகையில் 1 % க்கும் அதிகமான பழங்குடி மக்கள் இருக்கின்றனர். இது கிட்டதட்ட 6.51 இலட்சமாகும். தமிழகத்தில் 36 பழங்குடிச் சமூகக் குழுக்கள் வாழ்ந்து வருகின்றன. இதில் தோடா, கோடா, குரும்பர், இருளர், பனியர், கட்டு நாயக்கர் எனப் பல இனக் குழுக்கள் உள்ளன. இதில் கிழக்குத் தொடர்ச்சி மலையிலும், மலைகளை ஒட்டிய சமவெளிப் பகுதிகளிலும் 50% பேர் வாழ்ந்து வருகின்றனர். மேற்குத் தொடர்ச்சி மலை, மலைகளை ஒட்டிய பகுதிகளில் மீதமுள்ள 50% பேர் வாழ்ந்து வருகின்றனர்.

சமவெளிப் பகுதிகளில் வாழும் மக்கள் மிக வறிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர். செங்கல்பட்டு, மதுராந்தகம், காஞ்சிபுரம், செய்யார் பகுதிகளில் வாழும் இருளர் இனப் பழங்குடி மக்கள் செங்கல் சூளைகளிலும், கல் குவாரிகளிலும், அரிசி ஆலைகளிலும் கொத்தடிமைகளாக வேலை செய்யும் நிலை நீடிக்கிறது. புலிகள் சரணாலயம், வனவிலங்குப் பாதுகாப்புச் சரணாலயம், வன உயிரிகள் பாதுகாப்பு இடம், நியூட்ரினோ ஆய்வகம் என்ற பெயர்களில் மேற்குத் தொடர்ச்சி மலையின் பல பகுதிகளிலிருந்து பழங்குடி மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்படுகின்றனர்.

மக்கள் தொகையில் குறைவாக உள்ள அவர்கள், சொத்துடைமை அடிப்படையில் பின்தங்கியும், கல்வி, வேலைவாய்ப்புகளில் வஞ்சிக்கப்பட்டும் உள்ளனர். இவர்களுக்கான அரசின் பல திட்டங்கள் இவர்களைச் சென்று சேருவதே இல்லை. **பழங்குடி மக்களும் தங்களுடைய சிக்கல்களைத் தனித்தே எதிர்கொண்டு வருகின்றனர். ஒட்டுமொத்தச் சமூகத்திற்கும் பழங்குடி மக்களுக்கும் இடையேயான இடைவெளியே இதற்கும் காரணம். பழங்குடி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பாடுபடுவதன் மூலம் ஒரு கூட்டுச் சமூக உணர்வை வளர்த்தெடுக்க வேண்டும்.**

# தமிழ்நாட்டு மக்களின் அரசியல் வளர்ச்சி நிலை

இரசியா, பிரான்சு, செர்மனி, நேபாளம் ஆகிய நாடுகளைப் போன்று மன்னராட்சிக்கு எதிராகப் போராடி மன்னர்களைத் தூக்கியெறிந்து இங்கு மக்களாட்சி நிறுவப்படவில்லை. மாறாக இங்கு வரலாறு என்பதே மன்னர்களின் வரலாறாகவும், நாட்டின் பெருமை என்பது மன்னர்களின் பெருமையாகவும் இருக்கிறது.

மன்னராட்சிக் காலத்தைப் போல், 'நம்மால் என்ன செய்யமுடியும்; அரசு சொல்வதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்', 'இருக்கின்ற அரசியல் நிலைமைகளை மாற்ற முடியாது', 'தற்போது நிலவும் அரைகுறை சனநாயகமே போதும்' என்ற உணர்வே மேலோங்கி இருக்கிறது. அனைத்துச் சிக்கல்களுக்கும் ஊழல் மலிந்த அரசாட்சியும், அரசியல் கட்சிகளும்தான் காரணம் என்று சிலர் கருதுகின்றனர். இதற்குப் படைத்துறை (இராணுவ) ஆட்சி, கொடுங்கோலாட்சி (சர்வாதிகாரம்) போன்றவைதான் தீர்வு என்று மற்றொரு சாரார் கருதுகின்றனர். காவியங்களில் வருவதைப் போல தங்களுக்காகப் போராடத் தலைவர்கள் வருவார்கள் என்றும் வேறு சிலர் கருதுகின்றனர்.

இங்கு செயல்படும் அரசியல் கட்சிகளில் கூட இம்மன்னராட்சி சிந்தனையும் அரைகுறை சனநாயகமும்தான் தொடர்கிறது. கட்சித் தலைவர்களைப் புகழ்பாடுதலும், மரபுவழி (வாரிசு) அரசியல் நடைபெறுவதும் இதன் வெளிப்பாடே.

'மக்களுக்கே முழு அதிகாரம்' என்ற முழக்கத்துடன் அரசியல் அதிகாரத்தை நோக்கி முழு வடிவிலானப் போராட்டம் இன்னும் நடந்தேறவில்லை. தமிழ்நாட்டில் ஆங்காங்கே, நிலவுடமையாளர்கள், சாதி ஆதிக்கவாதிகள், பெருமுதலாளிகள் ஆகியோரின் ஒடுக்குமுறைகளை எதிர்த்து மக்கள் தங்களுக்கானப் போராட்டங்களை நடத்தி யிருந்தாலும், அது மிகப்பெரும் அரசியல் போராட்டமாக உருவெடுத்து அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றும் நிலைக்கு வளரவில்லை. பிரித்தானியர்களுக்கு எதிரானப் போராட்டம் என்பது கூட வேதகாலப் பெருமை கொண்ட இந்தியாவை வெளிநாட்டார் ஆள்வதா?' என்றே தொடங்கியது. அது எளிய மக்களிடம் அதிகாரத்தைக் கொண்டு சேர்க்கும் சனநாயகப் போராட்டம் என்ற கருத்தியல் அடிப்படையைக் கொண்டிருக்கவில்லை. எனவே, பிரித்தானியர்கள் வெளியேறியது நடந்ததே தவிர எளிய மக்களிடம் அரசியல் அதிகாரம் முழுமையாகக் கைமாறவில்லை.

நாடாளுமன்றம், சட்டமன்றம், வாக்குச் சாவடி உள்ளிட்ட அனைத்தும் மேலிருந்து நிறுவப்பட்டது மட்டுமல்லாமல் அரசியல் அதிகாரத்தை

மக்களுக்குப் பகிர்ந்தளிக்காத அமைப்புகளாக உருவாக்கப்பட்டன. ஆகவே, அவை மக்களாட்சியின் தோற்றப்பாடுகளாக மட்டுமே காட்சியளிக்கின்றன. அரசின் அத்தனை ஆட்சி அமைப்புகளின் கீழும் பெருந்திரளான மக்கள் சிறு துரும்பு போல் அதிகாரமற்றவர்களாக வாழ்கின்றனர். மக்களின் உரிமைகள் அனைத்தும், தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படும் சலுகைகளாகவும், போடப்படும் பிச்சைகளாகவும் காட்டப்படுகின்றன.

அண்மையில், மேற்கு ஆசியாவில் (எகிப்து, துனிசியா, துருக்கி) கொடுங்கோலாட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த மக்கள், எளிய மக்களின் அதிகாரத்திற்கான போராட்டத்தில் வெற்றிநடை போட்டு வருகின்றனர். **தமிழகத்திலும் அரசியல் அதிகாரம் மக்களிடம் கைமாறுவதற்கான மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.**

## இந்திய, தமிழக அரசு

ஓர் அரசின் கொள்கையும் தன்மையும் இரண்டு முதன்மையான அடிப்படைகளைப் பொறுத்து அமையும். ஒன்று அந்நாட்டில் வாழும் மக்களின் சமூக அரசியல் வளர்ச்சி நிலையையும் இரண்டாவது அவ்வரசு எவ்வாறு தோன்றியது என்பதையும் பொறுத்தது. நாம் வாழும் இந்தியத் துணைக்கண்டத்தில் இன்றிருக்கும் ‘மக்களாட்சி முறை’ என்பது, மன்னராட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து மக்கள் போராடியதால் நிறுவப்பட்டதல்ல. மாறாக, பிரித்தானியரால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆட்சிமுறைதான் இன்றும் பின்பற்றப்படுகிறது. அதாவது இந்திய நிலப்பரப்பை ஆண்டுவந்த பல்வேறு பேரரசர்களையும், சிற்றரசர்களையும் தோற்கடித்து, மன்னராட்சி முறையை முடிவுக்குக் கொண்டுவந்தது பிரித்தானியர்கள்தானே தவிர இந்தியாவில் வாழும் மக்கள் அல்ல. துண்டு துண்டான நாடுகளாக இருந்த நிலப்பரப்பை ஒன்றிணைத்து இந்தியா என்ற ஒரு நாட்டினை உருவாக்கினர். பின்னர் நடுவண் அரசு, மாகாண அரசுகள் எனப் பெயரளவிலான சனநாயக அரசியல் கட்டமைப்பினை ஏற்படுத்தினர். அதே நேரத்தில் முழு அரசியல் அதிகாரத்தையும் பிரித்தானியர்கள் தம்மிடமே வைத்துக் கொண்டு ஆட்சி புரிந்தனர். அன்றைய சென்னை மாகாணம் என்பது இன்றைய தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது. மற்ற குடியேற்ற அரசுகளிடம் (பிரான்சு, போர்த்துகல், நெதர்லாந்து) இந்திய நிலப்பரப்பு சென்றுவிடாமல், இங்குள்ள வளங்கள் முழுவதையும் தாமே கொள்ளையடிக்க வேண்டுமென்பதே பிரித்தானியர்களின் நோக்கமாக இருந்தது.

காலனியாதிக்கத்திற்கு எதிரான எழுச்சிமிக்கப் போராட்டங்களாலும் இரண்டாம் உலகப் போரின் முடிவில் உருவான புதிய பன்னாட்டுச் சூழலினாலும், 1947 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து பிரித்தானியர்கள் வெளியேறினர். பின்னர் பிரித்தானியாவின் இந்தியப் பேரரசில் இல்லாத காசுமீர், நாகாலாந்து, ஹைதராபாத், மணிப்பூர், அசாம் போன்ற தேசங்களை அங்கு வாழும் மக்களின் விருப்பத்தைக் கேட்காமல் படை பலத்தின் மூலம் இந்திய அரசு தன்னுடன் இணைத்துக் கொண்டது. 1950 ஆம் ஆண்டில் இந்திய அரசு தனக்கான அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொண்டு, தன்னை ஒரு குடியரசு நாடாக சாற்றுரைத்துக் கொண்டது.

இந்தியாவில் ஆட்சி முறை ஒன்றிய அரசின் கீழ் உள்ள மாநில அரசுகள் என இருக்கிறது. ஒன்றிய அரசு என்பது ஒவ்வொரு மாநிலமும் தன்னைப் பெயராண்மை(பிரதிநிதித்துவ) முறையில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடு. இந்தியா என்பது மாநில அரசுகளை உள்ளடக்கிய ஒன்றியம் என்று இந்திய அரசியலமைப்புச் சொல்கிறது. ஆனால் பிரித்தானியர் காலத்தில் மாகாணங்களுக்கென ஆளுநர்கள் இருந்தது போலவே இப்பொழுதும் மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தவும் கலைக்கவும் வல்ல ஆளுநர்கள் ஒன்றிய அரசால் பணியமர்த்தப்படுகின்றனர் (சர்க்காரியா ஆணையத்தின் அறிக்கைப்படி 1950 முதல் 1994 வரை 90க்கும் மேற்பட்ட முறை மாநில அரசுகள் நடுவண் அரசால் கலைக்கப்பட்டுள்ளன).

இந்தியாவில் உள்ள 534 தொகுதிகளில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களவைக்குச் செல்கின்றனர். நாடாளுமன்றத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமானால், மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஒப்புதல் வேண்டும். அதன்படி தமிழ்நாட்டில் இருந்துத் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகின்ற 39 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு சட்டத்தைத் ஆதரித்தாலும், எதிர்த்தாலும் அது ஒரு பொருட்டாகவே கருதப்படாது. ஏனென்றால் அது ஒட்டுமொத்த 534 நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்காகாது. இந்தப் பொருளில் மக்களவையைப் பொருத்தவரை அங்கு மாநிலப் பெயராண்மை (பிரநிதித்துவம்) இல்லை. எடுத்துக்காட்டாக, 2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த இனப்படுகொலைப் போரை நிறுத்த வேண்டும் என்ற தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்து ஒன்றிய அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சிங்களக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டாலும், இலங்கை அரசுடன் நட்புறவுதான் என்று இந்திய ஒன்றிய அரசு சொல்கிறது.

பொருளாதாரம், கல்வி, வெளியுறவு, உள்துறை என்று அனைத்து துறைகளிலும் ஒன்றிய அரசால் மட்டுமே கொள்கைகள் தீர்மானிப்படுகின்றன. அதை நடைமுறைப்படுத்தும் வேலையை மட்டுமே மாநில அரசுகள் செய்கின்றன. பல்வேறு துறைகளில் அயல்நாட்டு முதலீட்டிற்கு இசைவளிக்கும் உரிமை இந்திய ஒன்றிய அரசுக்கு மட்டுமே இருக்கிறது. அந்தந்த மாநிலங்கள் ஏற்பதா? மறுப்பதா? என்பதை அவர்களே முடிவெடுக்கலாம் என்று ஒன்றிய அரசு அவ்வப்போது விட்டுவிடுவதும் உண்டு. மாநில அரசுக்குத் தேவையான நிதியை இந்திய ஒன்றிய அரசே ஒதுக்குவதால் தன் கொள்கை முடிவுகளை ஏற்குமாறு மாநில அரசைக் கட்டாயப்படுத்துகிறது. சட்டம் ஒழுங்கு, உணவுப் பொருள் வழங்கல், வரி திரட்டல், தண்ணீர் வழங்கல் போன்ற மேலாண்மைப் பொறுப்புகள் மட்டுமே மாநில அரசுகளிடம் உள்ளன.

**இப்படியாக, பிரித்தானிய அரசில் இருந்ததைப் போன்று இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள பல்வேறு தேசியஇன மக்களின் உரிமைகளை மதிக்காமல், அரசியல் அதிகாரங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டுள்ள ஒன்றிய அரசாகவே இந்திய அரசு செயல்படுகிறது. இந்திய அரசின் உறுப்பாகிய தமிழக அரசோ மிகக் குறைந்த உரிமைகளுடன் செயல்படுகிறது. தமிழக மக்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு உரிமைகளைச் செயல்படுத்த முடியாத அதிகாரமற்ற அரசாகத் தமிழக அரசு விளங்குகிறது. அது ஒன்றிய அரசுக்கு வெறும் மேற்பார்வை வேலை செய்யும் அரசாக இருக்கிறது.**

தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளும் குறைக்கப்பட்ட தன்னாட்சி அதிகாரங்கள் கொண்டு இயங்கி வருகின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகரத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர், ஊராட்சித் தலைவர் உள்ளிட்டவர்களிடம் அதிகாரமில்லாமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், சிற்றூர் அலுவலர் உள்ளிட்ட அலுவலர்களிடம் முழு அதிகாரமும் இருக்கிறது. சிற்றூர், ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவற்றின் உரிமைகள் இந்திய அரசமைப்பில் மறுக்கப்படுகின்றன.

அரசியலமைப்பின்படி, இந்தியக் குடியரசு ஒரு மதச்சார்பற்ற அரசு. ஆனால் நடைமுறைச் செயல்பாட்டில், இந்துத்துவ ஆதிக்கத்திற்குத் துணைபுரியும் நிறுவனமாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக, நாட்டின் உயரிய பரிசுகள் அர்சூனா பரிசு, துரோணாச்சாரியார் பரிசு என்றும் ஏவுகணைகள் அக்னி, பிருத்வி என்றும் பெயர்கள் சூட்டப்படுகின்றன. இதன்மூலம் இந்திய அரசின் இந்துத்துவச் சார்புத் தன்மையை

நாம் அறிய முடியும. மதச் சிறுபான்மையினரான இசுலாமியர்கள், கிறித்தவர்கள் மீது மதவெறிபிடித்த இந்துத்துவ வெறியர்களால் வன்செயல்கள் மேற்கொள்ளப்படும் போது இந்திய அரசு இந்துத்துவ வெறியர்களின் பக்கம் நிற்கிறது. (எடுத்துக்காட்டாக ஒரிசாவில் பாதிரியார் எரித்துக் கொலை, குசராத்துப் படுகொலைகள், பாபர் மசூதி இடிப்பை ஒட்டிய கலவரங்கள்). **பல்வேறு மதத்தினர் வாழும் ஒரு நாடு மதச்சார்பற்ற நாடாக இருக்க வேண்டும் என்பதே சனநாயகத்தின் அடிப்படை அளவுகோல்.**

இந்தியச் சமூகத்தில் இருக்கும், சாதிய அடிப்படையிலான சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் பண்பாட்டு ஒடுக்குமுறைகளையும் களையப் பாடுபடும் சனநாயக அரசாக இல்லாமல் சாதியக் கட்டமைப்பைப் பாதுகாக்கிற அரசாகவே இந்திய அரசு செயல்பட்டு வருகிறது.

முன்பு பிரித்தானியர்கள் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் இந்தியாவை அடிமைப்படுத்தி இங்குள்ள வளங்களைச் சூறையாடின. 1947 ஆம் ஆண்டிற்கு பின் வளங்களைக் கொள்ளையடிக்கும் வேலையை மறைமுகமாகச் செய்கின்றன. இன்றைய உலகமயச் சூழலில் உள்நாட்டு, வெளிநாட்டு பெருமுதலாளிகள் என்றில்லாமல் இந்தியப் பெருமுதலாளிகளில் ஒரு பகுதியினர் பன்னாட்டுப் பெருமுதலாளிகளாகவும் இருக்கின்றனர். இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கை என்பது பெரும்பணக்காரர்கள் மென்மேலும் பணக்காரர் களாவதற்கு ஏற்றாற்போல் வடிவமைக்கப்படுகிறது. இந்நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லப்படும் உழவுத் தொழிலின் வளர்ச்சிக்கு உரிய கவனம் செலுத்தத் தவறியதால் உழவுத் தொழில் நலிந்து வருகிறது. இந்திய அரசு, மெல்லமெல்ல ஒவ்வொரு அரசுத் துறையையும் தனியார் துறையாக மாற்றி வருகிறது. வங்கி, காப்பீட்டுத் துறை, எரிவாயு, கல்வி, மருத்துவம், மின்சாரம் என்று இப்பட்டியல் நீள்கிறது. **அரசுத் துறை என்பது ஈட்டம் (இலாபம்) அற்றது எனும் தோற்றத்தினை உருவாக்கி அதன் மதிப்பைக் குறைத்துக் குறைவான வட்டி விகிதத்தில் வங்கிக்கடன், வரிக்குறைப்பு இன்ன பிற சலுகைகளுடன் தனியாருக்குக் கைமாற்றப்படுகிறது. தனியாருக்குப் போனவுடன் அத்தொழில்துறை பன்மடங்கு ஈட்டமளிக்கும் துறையாக மாறும் விந்தை நிகழ்கிறது.**

1991ஆம் ஆண்டிற்குப் பின் தொடங்கிய தாராளமய, தனியார்மய கொள்கைகளினால் வெளிநாட்டு நிறுவனங்களை அனுமதித்து இங்குள்ள வளங்களை அவர்களுக்கும் பங்குபோட்டுக் கொடுக்கிறது. இன்று நான்கு கோடிக் குடும்பங்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் வகையில் சில்லறை வணிகத்தில் அயல்நாட்டு முதலீட்டிற்கு ஒப்புதலளிக்கும் கட்டத்திற்கு வளர்ந்துள்ளது. அன்று ‘கிழக்கிந்திய கம்பெனியார்’ உள்ளே

நுழைந்தது போல் இன்று பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவிற்குள் படையெடுக்கின்றன. இந்திய அரசு, அவர்களின் ஈட்டத்தைப் பெருக்கும் விதமாகவே தன்னுடைய பொருளாதாரக் கொள்கையை வடிவமைக்கிறது. சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தரும் ஊக்கத்தொகையோ நாட்டு வளர்ச்சிக்குத் தேவையானது என ஏமாற்றுகிறது. உழவர்களுக்கு மானியம் கொடுப்பது பிச்சைப் போடுவது என்ற தோற்றத்தை உருவாக்குகிறது. இப்படியாக இந்திய அரசு உள்நாட்டு இயற்கை, மனித வளங்களை பன்னாட்டுப் பெருமுதலாளிகளுக்கு வாரிக்கொடுத்துக் கொண்டிருக்கிறது. சுருங்கக்கூறின் உள்நாட்டு, வெளிநாட்டு பெருமுதலாளிகளின் நலன்களை மட்டும் பாதுகாக்கிற நிறுவனமாகவே இந்திய அரசு செயல்படுகிறது.

கல்வி, மருத்துவம் உள்ளிட்ட துறைகள் தனியார்மயப்படுத்தப்பட்டு மக்களின் பணம் கொள்ளையடிக்கப்படுகிறது. தரமான கல்வி, மருத்துவம், தண்ணீர், போக்குவரத்து, பாதுகாப்பான, நிரந்தர வேலை உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய மறுக்கும் அரசாகவே இந்திய, தமிழக அரசுகள் இருக்கின்றன.

அன்னிய நேரடி முதலீட்டு (FDI) அனுமதியால் நாடு வளர்ச்சியடையும், வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என்று பன்னாட்டு நிறுவனங்களை வரவேற்று நாட்டின் வளங்களை, மக்களின் உழைப்பைச் சூறையாட அனுமதித்து வரும் இந்திய, தமிழக அரசுகளின் ‘வளர்ச்சி’ என்கிற பிரம்மாண்டம் சமீபகாலமாக தவிடுபொடியாகி வருகிறது. சென்னையை அடுத்த திருப்பெரும்புதூரில் 2006இல் மிகப் பெரிய அளவில் தொடங்கப்பட்ட நோக்கியா நிறுவனம் இன்று ஆயிரக்கணக்கில் தொழிலாளர்களை வெளியேற்றி மூடும் நிலையில் உள்ளது. இந்நிலைக்குத் தொழில் நலிவோ நட்டமோ காரணமில்லை. குறைவான விலையில் 210 ஏக்கர் நிலம் 99 ஆண்டுகள் குத்தகை, விற்பனை வரிச் சலுகை, 10 ஆண்டுகளுக்கு வருமான வரி விலக்கு, தடையில்லா மின்சாரம் போன்ற பல கோடி ரூபாய்க்கான சலுகைகளை உறுதி செய்யும் தமிழக அரசின் புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன்தான் நோக்கியா நிறுவனம் 650 கோடி ரூபாய் முதலீடு செய்தது.

8000 நிரந்தரத் தொழிலாளர்கள், 2500 ஒப்பந்தத் தொழிலாளர்கள், 1500 பயிற்சித் தொழிலாளர்கள் என 12,000 தொழிலாளர்களின் உழைப்பால் மாதந்தோறும் 1.3 கோடி கைப்பேசிகள் செய்யப்பட்டு 2013 வரை 1.5 இலட்சம் கோடி ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது. நோக்கியா தனது நிறுவனத்தை 2013இல் அமெரிக்காவின் மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு விற்கப் போவதாக ஒப்பந்தம் போட்டது. ஏப்ரல் 26, 2014லிருந்து நோக்கியா மைக்ரோசாப்ட் நிறுவனத்தின்

கைக்கு அதிகாரப்பூர்வமாக மாற்றப்பட்டது. இந்நிலையில், சுமார் 24,000 கோடி ரூபாய் வருமான வரி ஏய்ப்புச் செய்துள்ளதாக நோக்கியா நிறுவனம் மீது குற்றஞ்சாட்டப்பட்டுத் தில்லி உயர் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. இதனால், மைக்ரோசாப்ட் நிறுவனம் நோக்கியாவின் சென்னை ஆலையை வாங்கவில்லை. நோக்கியா நிறுவனம் மேற்கொண்டு நடத்தவும் விரும்பவில்லை. இதன் விளைவாய், விருப்ப ஓய்வுத் திட்டத்தாலும் கட்டாயப் பணிநீக்கத்தாலும் ஆயிரக்கணக்கானோர் பணி நீக்கப்பட்டுள்ளனர். இன்று, நோக்கியா வெறும் 900 தொழிலாளர்களுடன் இயங்குகிறது. நோக்கியாவிற்கு உதிரிப்பாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் பலவும் மூடும் நிலையில் உள்ளன. தொடங்கும்போது 'வளர்ச்சி', 'வேலைவாய்ப்பு' என்று விளம்பரப்படுத்திய அரசும் ஊடகங்களும் இன்று பணிநீக்கத்தைப் பற்றி மூச்சும் விடுவதில்லை. இந்திய அரசின் வளர்ச்சிக் கொள்கை என்பது பெருமுதலாளிகளின் நலன்களுக்கானது, தொழிலாளர்களின் நலன்களுக்கு எதிரானது என்பதற்கு நோக்கியா நம்முன் இருக்கும் அண்மைக்காலச் சான்றாகும்.

இந்த கார்ப்பரேட் வணிகப் பின்னணியில்தான் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் ஊழல்கள் நடக்கின்றன. கார்ப்பரேட் பின்னணியை மறைத்துவிட்டு ஊழலை ஒழிக்கப் போகிறோம் என்ற முழக்கத்துடன் அரசியல் கட்சிகள் வந்து கொண்டிருக்கின்றன. **மொத்தத்தில் இந்தப் பொருளியல் கொள்கைகள் மாற்றப்பட வேண்டும். இங்குள்ள வளங்களை இங்குள்ள மக்களின் நலனுக்கே பயன்படுத்த வேண்டும். அவ்வுரிமை முழுவதும் அந்தந்த மாநில அரசிடமே இருக்க வேண்டும்.**

***இன்று இருப்பதுபோல் அனைத்து அதிகாரங்களும் இந்திய ஒன்றிய அரசிடம் குவிக்கப்பட்டுள்ளதற்கு மாறாக, தமிழக அரசு என்பது தன்னுடைய அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் கொள்கைகளைத் தானே தீர்மானிக்கும் முழு அதிகாரம் பெற்ற அரசாக இருக்க வேண்டும். அக்கொள்கைகள் சாதி ஒழிப்பையும் மதச்சார்பின்மையையும் சமூக சனநாயகத்தையும் சமத்துவத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.***

# ஈழ விடுதலைப் போராட்டமும் ஏனைய தேசிய இன விடுதலைப் போராட்டங்களும்

**2009** ஆம் ஆண்டில் பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்களைக் கொன்றொழித்து சிங்கள அரசு நடத்திய இனப்படுகொலைப் போரை நிறுத்த வலியுறுத்தி உருவான எமது இயக்கம், அவர்கள் மீதான ஒடுக்குமுறை தேசிய இன ஒடுக்குமுறை எனவும், அவர்களுடைய 65 ஆண்டுகாலப் போராட்டம் தேசிய இன விடுதலைப் போராட்டம் எனவும் புரிந்துகொண்டுள்ளது. சிங்களப் பௌத்தப் பேரினவாதத்தின் பிடியில் சிக்கி இன அழிப்புக்கு ஆளாகி வரும் ஈழத் தமிழர்கள் ஒரு தனித்த தேசிய இனம். இலங்கைத் தீவின் வடக்கும் கிழக்கும் அவர்களது தாயகம். ஈழத்தமிழர்கள் சம உரிமை கோரி, முதல் முப்பது ஆண்டுகள் அமைதிவழிப் போராட்டத்தையும், அடுத்த முப்பது ஆண்டுகள் ஆயுதவழிப் போராட்டத்தையும் நடத்தினார்கள். எந்த ஒரு தேசிய இனத்திற்குமுள்ள தன்தீர்வுரிமை அடிப்படையில் தனிநாடு கோரி போராட்டம் நடத்தினார்கள். அப்போராட்டத்தை நசுக்குவதற்காகவே 'பயங்கரவாதத்திற்கு எதிரானப் போர்' என்ற பெயரில் ஒரு இனஅழிப்புப் போரை நடத்தி இலட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்தது இலங்கை அரசு. இப்போர் குறித்து பல சான்றுகள், ஆவணங்கள், ஆய்வறிக்கைகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவையனைத்தும் இலங்கை அரசின் போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலைக் குற்றங்கள் ஆகியவற்றை அம்பலப்படுத்துவதோடு அதன் மீது தற்சார்புள்ள பன்னாட்டுப் புலனாய்வின் தேவையை வலியுறுத்துகின்றன.

1905 ஆம் ஆண்டு நார்வே சுவீடன் பிரிந்த காலந்தொடங்கி தெற்கு சூடான் விடுதலை (2011) வரை ஏறக்குறைய இருபது முறை இவ்வுலகின் பல்வேறு பகுதிகளில் சனநாயக வழியில் புதிய நாடுகள் உருவாகியுள்ளன. 2014ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து விடுதலை குறித்தான பொதுவாக்கெடுப்பு நடைபெற உள்ளது. உலக நாடுகளின் எண்ணிக்கையானது, இரண்டாம் உலகப் போரின் முடிவில் 1946 ஆம் ஆண்டு 66 ஆகவும், 1987ஆம் ஆண்டு 122 ஆகவும், 1994 ஆம் ஆண்டு 187 ஆகவும், இன்று 2014ஆம் ஆண்டு 193 ஆகவும் மிகுதியாகியுள்ளன. இரு தேசிய இனங்கள் பிரிந்து தனி அரசுகளாவதும் பின்பு இணைந்து ஒன்றியஅரசுகளாவதும் உலகின் பல்வேறு பகுதிகளில் இயல்பாய் நடைபெற்று வருகின்றன.

இலங்கையில் உள்ள இனச்சிக்கலை முடிவுக்குக் கொண்டுவர ஈழத்தமிழர்கள் ஒரு தனித்த தேசிய இனம் என்பதையும் அவர்களுடைய

தன்தீர்வுரிமையையும் அங்கீகரிக்க வேண்டும். சிங்களவர்களோடு சேர்ந்து இருப்பதா? அல்லது பிரிந்து செல்வதா? என்று ஈழத் தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்த வழி அமைப்பதே அமைதி வழியிலான சனநாயகத் தேர்வு.

தொடக்கத்தில் மன்னராட்சிக்கு எதிராகத் தேசிய விடுதலைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் காலனியாதிக்கத்திற்கு எதிராகத் தேசிய இயக்கங்கள் தோன்றின. மனிதகுலத்தின் இன்றைய வளர்ச்சிக்கட்டடத்தில் காலனியாதிக்கம் ஏற்படுத்திக்கொடுத்த எல்லைக்கோடுகளால் உருவான நிலப்பரப்புகளில் ஒற்றையாட்சி முறையில் இணைக்கப்பட்டிருக்கும் அரசுரிமையற்ற தேசங்களில் தேசிய விடுதலை இயக்கங்கள் போராடி வருகின்றன. அதில் ஒன்று தமிழீழம். தமிழீழத்தைப் போலவே, பல்லாண்டுகளாக உலகில் பல்வேறு தேசிய இனங்கள் தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக, தேசிய அரசுரிமைக்கான தேசிய விடுதலைப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. உரிமைக்கான இந்தப் போராட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படுகின்றனர். இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் இக்கொடுமை தொடர்வது மனிதகுல வளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளது. **ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தன்தீர்வுரிமை உண்டு; அது அத்தேசத்தின் அடிப்படை சனநாயக உரிமை. வெகுமக்கள் பங்காற்றும் சனநாயகத்தில் நம்பிக்கையுள்ள எமது இயக்கம், ஒடுக்கப்படும் தேசங்களின் பக்கம் நின்று அவற்றின் விடுதலைப் போராட்டங்களுக்குத் துணை நிற்கும்.**

# புதிய நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் தோற்றமும் அதன் குறிப்பான சிக்கல்களும்

இதுவரை தமிழ்நாட்டு மக்களின் பொதுவான சமூகம், அரசியல் வளர்ச்சி நிலையை சுருக்கமாகக் கண்டோம். அதே நேரத்தில், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வர்க்கத்திற்கென்றும் குறிப்பான சிக்கல்கள் இருக்கின்றன. எனவே, நகர்ப்புறத்தில் உருவாகியுள்ள புதிய நடுத்தர வர்க்கத்தினரை மிகுதியாகக் கொண்டுள்ள இளந்தமிழகம் இயக்கம், அவ்வர்க்கத்தினரின் தோற்றம், அதன் குறிப்பான சிக்கல்கள் பற்றிய தன் பார்வையை கீழே முன்வைத்துள்ளது.

1991 ஆம் ஆண்டில் இந்திய அரசு உலகமயமாக்கலையும், புதிய தாராளவாதத்தையும் இந்தியப் பொருளாதாரத்திற்குள் அறிமுகப் படுத்தியது. பன்னாட்டு நிறுவனங்கள் மூலதனத்தை இறக்குவதற்கு ஏற்ற உள்கட்டமைப்புத் தமிழ்நாட்டில் இருக்கிறது. அது மட்டுமின்றி, குறைந்த கூலிக்கு மூளை உழைப்பைப் பெறுவதற்கு ஏற்ற கல்வி அடித்தளத்தையும் தமிழ்நாடு கொண்டிருக்கிறது. இதன் விளைவாக தகவல் தொழில்நுட்பத் துறையும், பன்னாட்டுக் கனரகத் தொழில் துறையும் தமிழ்நாட்டில் வேகமான வளர்ச்சி பெற்றன.

புதிய வேலைவாய்ப்புகளுக்காகச் சிறு நகரங்களிலும், சிற்றூர்களிலும் இருந்து முதல் தலைமுறையாகத் தொழில்துறையில் பட்டப்படிப்பு படித்த ஒரு பெருந்தொகையான மக்கள் நகரங்களை நோக்கி நகர்ந்தனர். இப்படி நகரங்களை நோக்கிவந்த இளைஞர்கள் வேலைக்குச் சேர்ந்தவுடன் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் மாத ஊதியம் பெற்றார்கள். கடந்த தலைமுறையில் நடுவண், மாநில அரசு வேலைகளில் கூட தொடக்க நிலையிலேயே இத்தனை அதிகமான ஊதியம் பெற்றதில்லை. இந்தத் துறைகளில் ஆண்டுக்கு ஆண்டு ஊதிய உயர்வு, வெளிநாட்டில் பணி அமர்வு, டாலர், யூரோக்களில் ஊதியம், குளிரூட்டப்பட்ட கட்டிடங்களில் வேலை, ஆணுக்கும் பெண்ணுக்கும் இணையான ஊதியம், யாரும் யாரையும் பெயர் சொல்லி அழைக்கும் மேற்கத்தியப் பண்பாடு என்று பல புதிய கூறுகள் நிரம்பியிருந்தன. முந்தைய தலைமுறையினரின் வாழ்நாள் கனவான தனக்குரிய வீடு என்பது, இவர்களுக்கு படித்து முடித்த பத்தாண்டுகளுக்குள் நிறைவேறும் கனவானது.

வெளிப்படையான மற்றும் இட ஒதுக்கீட்டு அடிப்படையிலான பணி நியமனம், வெளிப்படையான முறையில் ஊதியம், ஊதிய உயர்வு, பதவி, தொழிலாளர் நலச்சட்டப்படி எட்டு மணி நேர வேலை, வேலை உத்தரவாதம், இத்தகைய உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு சங்கம்

வைத்துக் கொள்ளும் உரிமை ஆகிய அனைத்தும் அரசு நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு உண்டு. ஆனால் இவை அனைத்தும் முற்றிலுமாக மறுக்கப்பட்டோ அல்லது குறைக்கப்பட்டோ இருக்கும் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள்தான் இவர்கள்.

புதிய தாராளமயம் இவர்களைச் சாதிய இனக்குழு, வட்டார வாழ்வியலிலிருந்து பிடுங்கிப் போட்டது; நுகர்வியப் பண்பாட்டுக்கு அறிமுகப் படுத்தியது; நுகர்வியப் பண்பாட்டிற்கு பழக்கப்பட்டதன் விளைவாக இதில் ஒரு பிரிவினர் தேவைக்கு அதிகமான நுகர்வு, கடன் அட்டைகள் (credit card), வங்கிக் கடன்கள் என்று கடன் சுமைக்கு ஆளாகின்றனர். மேலும் இந்த நுகர்வியப் பண்பாடு இவர்களைச் சமூகத்தில் இருந்து பிரித்துக் கூட்டு உணர்வு, கூட்டுச் சிந்தனை, கூட்டு வாழ்க்கை ஆகியவை இல்லாத தனிமனிதர்களாக மாற்றி வருகிறது. இந்தக் காரணங்களால் எந்த ஒரு பிரச்சனையையும் சமூகப் பிரச்சனையாகப் பார்க்காமல் தனி மனிதப் பிரச்சனையாகப் பார்க்கும் போக்கு உள்ளது. தங்களுடைய வாழ்க்கை முறையும் அதனால் எழும் பிரச்சனைகளும் உருவாக்கும் உளவியல் வெறுமையை நிரப்பிக் கொள்வதற்குத் தற்திற மேம்பாட்டு (யோகா) மையங்கள், ‘புதிய ஆன்மீகம்’, இரவு நேரக் கேளிக்கை விடுதிகள் முதலியவற்றை நோக்கி இவர்கள் குவிந்து வருகின்றனர்.

இவ்வரசின் கொள்கைகள்தான் பொருளாதார ரீதியாக மேம்பட்ட ஒரு வாழ்க்கையைத் தங்களுக்கு வழங்கியுள்ளது. அதுபோல் பெரும்பான்மை மக்களுக்கான வாழ்வையும், முன்னேற்றத்தையும் கருதியே அரசின் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன என்று நம்புகின்றனர். இந்தக் கொள்கைகள் ஆட்சிப்பணிச் சீர்கேட்டினாலும், ஊழலாலும் மட்டுமே பலனளிக்காமல் உள்ளன என்று சிலர் கருதுகின்றனர். பல நேரங்களில் மக்களுக்கு விழிப்புணர்வு, பொறுப்புணர்வு இல்லை என்று குறை கூறுகின்றனர். இத்தகைய கருத்தினால் இதில் சமூக அக்கறை கொண்ட ஒரு பகுதியினர், அரசின் தவறான கொள்கைகளைக் கேள்விக்கு உள்ளாக்காமல் சீர்திருத்த நோக்கங்களுடன் திக்கற்றவர் (அனாதை) இல்லம், முதியோர் இல்லம், ஏழை மாணவர்களுக்கான பயிற்சி நிலையங்கள், கல்வி அறக்கட்டளைகள், தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றை நோக்கிச் செல்கின்றனர்.

**இவ்வர்க்கத்தில் பெரும் பகுதியினர் இவ்வரசின் கொள்கைகளை எப்போதும் வரவேற்பவர்களாகவும், மக்களின் உரிமைப் போராட்டங்களைக் கண்டும் காணாமல் இருப்பவர்களாகவும், பலநேரங்களில் எதிர்ப்பவர்களாகவும் இருக்கின்றனர். எனவே, இத்தகைய வர்க்கத்தினரின் ஆதரவைத் தக்க வைத்துக் கொள்வதற்கு அரசு தொடர்ச்சியாகச் செயல்பட்டு வருகிறது.**

புதிய நடுத்தர வர்க்கத்தினரிலிருந்து உருவாகி இருக்கும் இளந்தமிழகம் இயக்கம்,

* இவ்வர்க்கத்தினரிடம் இப்போதிருக்கும் சமூகம் குறித்த விழிப்பற்ற நிலையை மாற்றப் பாடுபடும்.

* இவ்வரசின் கொள்கைகளையும், சமூக நிகழ்வுகளையும் வரலாற்று அறிவியல் பார்வையோடு ஆராய வேண்டும்; அதனடிப்படையில் அடித்தட்டு மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு ஒரு நிலைப் பாட்டை எடுக்க வைப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படும்.

* தனி நபர் சிந்தனை முறைக்கு மாறாகக் கூட்டு உணர்வு, கூட்டுச் சிந்தனையை வளர்ப்பதற்குப் பாடுபடும்.

* எந்த ஒரு சிக்கலையும் சமூகச் சிக்கலாகப் பார்த்து அதற்கான காரணங்கள் களையப்பட வேண்டும் என்பதை முன் வைக்கும்.

* குடும்பம், பணியிடம், சமூகம் என அனைத்து மட்டங்களிலும் சனநாயக உணர்வை வளர்த்தெடுக்கப் பாடுபடும்.

* இச்சமூகத்தின் உழைப்பால் உருவாகிய இவ்வர்க்கம், புதிய தொழில்நுட்ப வளர்ச்சி கொடுத்த வாய்ப்புகளால் பெற்ற அறிவை நீடித்த சமூக மாற்றத்திற்குப் பயன்படுத்தச் செய்ய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படும்.

அரசுத்துறைப் பணியாளர்கள் தங்கள் சிக்கல்களை எடுத்துரைப்பதற்கும் தீர்ப்பதற்கும் தீர்ப்பாயம் உள்ளது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்கள் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தொழிற்சங்கங்கள் உள்ளன. 1991 ஆம் ஆண்டிற்குப் பிறகு உலகமயமாக்கலினால் நிறுவப்பட்ட பன்னாட்டுத் தொழிற் சாலைகளில் உரிமைகள் குறைக்கப்பட்டு தொழிற்சங்கங்கள் இயங்கி வருகின்றன. கணிணித்துறையின் வளர்ச்சியினால் பெருகிவரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணிபுரியும் பலநூறாயிரம் கணிணித் தொழிலாளர்கள் உள்ளனர். இவர்கள் உள்ளிட்ட புதிய நடுத்தர வர்க்கத்தினர், எட்டு மணி நேரத்திற்கு அதிகமான வேலை நேரம், வெளிப்படையற்றத் தன்மையில் நடைபெறும் பணியமர்த்தல், ஊதியம் தீர்மானித்தல், ஊதிய உயர்வு, பதவி உயர்வு, பணிநீக்கம் ஆகிய சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.

ஆனால், இவர்களுக்குத் தங்கள் குறைகளைப் பேசுவதற்கும் மேல்முறையீடு செய்வதற்கும் வெளிப்படையான மன்றங்கள்(forums) இல்லை. சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் செயல்பட்டு வரும் சிறுதொழில் நிறுவனத் தொழிலாளர்களுக்கும் உள்ளது. **இந்நிலையை**

***மாற்றி இவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுப்பதற்கும் தேவையான மன்றங்களை உருவாக்க எமது இயக்கம் இவ்வர்க்கதினரை அணிதிரட்டும். அனைத்துத் துறைகளையும் சார்ந்த தொழிலாளர்களுடன் ஒற்றுமையை வளர்ப்பதற்கும் இணைந்து செயல்படுவதற்கும் இளந்தமிழகம் இயக்கம் பாடுபடும்.***

## இயக்கத்தின் தேவையும் நோக்கமும்

காலம் தோறும் ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிரான சமத்துவத்திற்கான போராட்டம் நடந்து வருகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருக்குறள், "**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்**" என்று பிறப்பின் அடிப்படையிலான சாதிய ஏற்றத் தாழ்வு களுக்கு எதிராகச் சமத்துவத்தைப் பேசியது. இராமானுஜர், நந்தனார், வள்ளலார் போன்றோர் சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளையும் ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துப் போராட்டங்களை நடத்தினர்; சமயச் சீர்த்திருத்தங்களைக் கொண்டுவந்தனர். பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் அயோத்திதாசர், பெரியார், சிங்காரவேலர், மறைமலையடிகள் ஆகிய பல்வேறு அரசியல் நீரோட்டங்களைச் சேர்ந்த முன்னோடிகளின் வழிகாட்டலில் சமூக நீதி, இந்திய விடுதலை, சனநாயகம், சமத்துவம் ஆகியவற்றுக்கானப் போராட்டங்கள் தொடர்ந்தன. இதே காலகட்டங்களில் இதே நோக்கங்களுக்காக இந்திய அளவில் ஜோதிபா பூலே, காந்தியார், அண்ணல் அம்பேத்கர், சுபாஷ் சந்திர போஸ், பகத்சிங் ஆகியோர் போராட்டங்களை முன்னகர்த்தினர். இவர்தம் போராட்டங்கள் கருத்தளவிலும், செயலளவிலும் தமிழகத்தில் பெரும்செல்வாக்குச் செலுத்தின; செலுத்தி வருகின்றன.

இப்படியான நீண்ட தொடர்ப் போராட்டங்களின் பயனாகத்தான் பல்வேறு உரிமைகள் வென்றெடுக்கப்பட்டுள்ளன. சான்றாக, இந்திய விடுதலை, அனைவருக்கும் வாக்குரிமை, சாதித் தீண்டாமைக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டங்கள், பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டங்கள், நிலமில்லா உழவர்களுக்கு நிலங்கள் பகிர்ந்தளிப்பு, கல்வி, அரசு வேலைகளில் இட ஒதுக்கீடு உள்ளிட்டவற்றைக் கூறலாம். இத்தொடர்ப் போராட்டங்களினால், தமிழ்ச் சமூகம் முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

இப்போராட்டங்கள் இன்னும் முழுமை அடையவில்லை. சமத்துவத்திற்கான போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. சமூக மாற்றத்திற்கான இப்போராட்டத்தில் இப்புதிய நகர்ப்புற நடுத்தர வர்க்கமும் இணைய வேண்டிய தேவையுள்ளது. ஒரு குறிப்பிட்ட

சமூகத்தின் வரலாற்று தொடர்ச்சியின்றி அச்சமூகத்தில் சமூக அரசியல் இயக்கங்கள் தன்னெழுச்சியாகத் தோன்றியதில்லை. உலகத்தில் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஏற்படும் பொருளியல் மாற்றங்கள் புதிய வர்க்கங்களைத் தோற்றுவிக்கின்றன. அவை தங்களுடைய உரிமைகளுக்காகவும் ஒட்டுமொத்தச் சமூகத்தின் உரிமைகளுக்காகவும் போராடுகின்றன. அவ்வாறே தமிழகத்தில் மாறிவரும் புறச்சூழலால் இப்புதிய நடுத்தர வர்க்கத்தினரில் பலர் இத்தொடர்ப் போராட்டத்தில் இணைந்துள்ளனர். இது வரலாற்றின் தேவையும் கூட. இதை உணர்ந்து இப்புதிய நடுத்தர வர்க்கத்தினரையும் தமிழ்நாட்டில் நீண்ட காலமாக நடைபெற்று வரும் சமூக நீதி, சமூக சனநாயகம், சமத்துவத்திற்கான போராட்டத்தில் இணைக்கும் வரலாற்றுத் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்தோடு இளந்தமிழகம் இயக்கம் செயல்படும்.

இன்று இருப்பதுபோல் அனைத்து அதிகாரங்களும் இந்திய ஒன்றிய அரசிடம் குவிக்கப்பட்டுள்ளதற்கு மாறாக, தமிழக அரசு என்பது தன்னுடைய அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் கொள்கைகளைத் தானே தீர்மானிக்கும் முழு அதிகாரம் பெற்ற அரசாக இருக்க வேண்டும். அக்கொள்கைகள் சாதி ஒழிப்பையும் மதச்சார்பின்மையையும் சமூக சனநாயகத்தையும் சமத்துவத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

நமது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் அரசியலும் அதன் கொள்கைகளும் தீர்மானிக்கின்றன. அரசியலில் இருந்து ஒதுங்கிப் போவதாலோ விலகி நிற்பதாலோ பயனில்லை. அரசியலைப் புரிந்து கொண்டு அரசியல் கொள்கைகள் குறித்து உரையாடி, சரி, தவறைக் கண்டறிந்து அதை மக்களிடம் கொண்டு செல்கிறோம்.

நம்மை உருவாக்கிய இந்த சமூகத்தின் வளர்ச்சிக்கு எமது நேரத்தையும் ஆற்றலையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். கூட்டுச் செயல்பாட்டின் பலனை இயக்கச் செயல்பாட்டின் மூலம் கண்டு வருகிறோம்.

தனி மரம் தோப்பாவதில்லை. வரலாற்றைத் தீர்மானிப்பது ஒன்றிரண்டு தனி மனிதர்களல்ல. நம்மைப் போன்ற மக்களே. ஆம்! மக்களே வரலாற்றை முன்னகர்த்திச் செல்கின்றனர்.